TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

1506

 සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2017 / 2018 (2020)

# Limited / Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Accountants' Service - 2017 / 2018 (2020)

## (01) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் I
## Financial Accounting - Paper I

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.
- கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- நிரல்படுத்தப்படாத (Non - Programmable) கணிப்பான்களை மாத்திரம் பயன்படுத்த முடியும்.

**1.** 31 மார்ச் 2019 இலுள்ளவாறான கண்டி PLC நிறுவனத்தின் பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

| | வரவு ரூ. ('000) | செலவு ரூ. ('000) |
|---|---|---|
| **ஆதனம் பொறி உபகரணம் (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு)** | | |
| - காணி - மீள் மதிப்பீடு செய்த தொகையில் .............. | 4 000 | – |
| - காரியாலய கட்டடம் - கிரயத்தில் .......................... | 5 000 | – |
| - விநியோக வாகனங்கள் - கிரயத்தில் ........................ | 3 000 | – |
| - காரியாலயத் தளபாடங்கள் - கிரயத்தில் .................. | 500 | – |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு) | | |
| - காரியாலய கட்டடம் ............................................. | – | 200 |
| - விநியோக வாகனங்கள் ........................................... | – | 600 |
| - காரியாலயத் தளபாடங்கள் ...................................... | – | 100 |
| முதலீட்டு ஆதனம் (Investment property) - நியாயப் பெறுமதியில் (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு) ........................................ | 5 800 | – |
| ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு - (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு)... | – | 100 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் ........................ | – | 10 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு) ........... | – | 1 200 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் (01 ஏப்ரல் 2018 இலுள்ளவாறு) ... | – | 5 120 |
| நீண்டகால வங்கிக் கடன் - 12% ...................................... | – | 5 000 |
| வியாபார வருமதிகள் .................................................. | 3 120 | – |
| வியாபார சென்மதிகள் ................................................. | – | 2 700 |
| சரக்கிருப்பு (கிரயத்தில்)................................................ | 4 600 | – |
| விற்பனைகள் ............................................................ | – | 14 180 |
| முதலீட்டு ஆதனங்கள் மீது பெற்றுக்கொண்ட வாடகை வருமானம் ... | – | 300 |
| விற்பனைக்கிரயம் ...................................................... | 7 450 | – |
| நிர்வாகச் செலவுகள் .................................................. | 1 140 | – |
| விற்பனை விநியோகச் செலவுகள் .................................... | 1 320 | – |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள்........................................ | 420 | – |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் ................................ | 1 000 | – |
| வங்கியிலுள்ள காசு..................................................... | 3 410 | – |
| கையிலுள்ள காசு........................................................ | 740 | – |
| நடைமுறை ஆண்டுக்காகச் செலுத்திய வருமானவரி .................. | 500 | – |
| பங்கு வழங்கற் கணக்கு ................................................ | – | 2 500 |
| | **42 000** | **42 000** |

[பக். 2 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



**மேலதிக தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :**

(1) 31 மார்ச் 2019 இலுள்ளவாறான முடிவுக் கையிருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூ 4 400 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) ஆதனம் பொறி உபகரணமானது கீழுள்ளவாறு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| காரியாலய கட்டடம் | 2% |
| விநியோக வாகனங்கள் | 20% |
| காரியாலய தளபாடங்கள் | 10% |

(3) காணியானது 31 மார்ச் 2019 இல் தொழில்சார் மதிப்பீட்டாளரினால் ரூ. 4 500 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பில் எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை. இக்காணியின் முன்னைய மீள்மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு இலாபத்தை தற்போதைய மீள்மதிப்பீட்டு ஒதுக்க மீதியானது பிரதிபலிக்கின்றது.

(4) 01 ஏப்ரல் 2017 இல் ரூ. 1 000 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட விநியோக வாகனமொன்று 31 மார்ச் 2019 இல் ரூ. 800 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இவ்விற்பனையால் பெற்ற தொகையை வங்கிக் கணக்கில் வரவு வைத்து விற்பனைக் கணக்கில் செலவு வைத்தது தவிர இது தொடர்பில் வேறு எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

(5) நிறுவனத்தின் கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்துள்ளமையால் அவர் தர வேண்டிய ரூ. 120 000 தொகையானது அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்படல் வேண்டும்.

(6) இறுதி வியாபார வருமதிகள் மீது ஐயக்கடன்களுக்காக 5% ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(7) 31 மார்ச் 2019 இல் பின்வரும் செலவுகள் அட்டுறுவாகக் காணப்படுகின்றது.

விளம்பரப்படுத்தற் செலவுகள் ரூ. 300 000

கணக்காய்வாளர் கட்டணம் ரூ.200 000

(8) கம்பனியானது மார்ச் 2019 இல் ரூ. 2 500 000 க்கு சாதாரண பங்குகளுக்கான உரிமை வழங்கல் ஒன்றை மேற்கொண்டது. இது தொடர்பில் பெறப்பட்ட காசானது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் "பங்கு வழங்கற் கணக்கில்" செலவு வைக்கப்பட்டுள்ளது.

(9) நிதி மற்றும் ஏனைய செலவுகளானது 12% நீண்டகால வங்கிக் கடனுக்காக செலுத்தப்பட்ட ஆறு மாத வட்டியை மட்டும் உள்ளடக்கியுள்ளது. மிகுதி ஆறு மாதத்துக்கான வட்டி 31 மார்ச் 2019 இல் சென்மதியாகவுள்ளது.

(10) கம்பனியானது முதலீட்டு ஆதனங்களை ரூ. 50 000 மாதாந்த வாடகையில் வாடகைக்கு விட்டுள்ளது. காலப்பகுதியின் ஆறு மாதங்களுக்கு பெற்றுக்கொண்ட வாடகையை மட்டுமே வாடகை வருமானமானது பிரதிபலிப்பதுடன் மிகுதி ஆறு மாதத்துக்கான வாடகை வருமதியாகவுள்ளது.

(11) 31 மார்ச் 2019 இல் முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதியானது ரூ. 6 000 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(12) நடப்பாண்டுக்கான மொத்த வருமானவரிச் செலவுகள் ரூ. 700 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது ;**

இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 1 இற்கு (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) அமைவாக பிரசுரிக்கும் நோக்கத்திற்காக கண்டி PLC நிறுவனத்தின் பின்வரும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்குக.

(i) 31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(ii) 31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்களுக்கான கூற்று

(iii) 31 மார்ச் 2019 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

*(40 புள்ளிகள்)*

[பக். 3 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE



**2.** சுகுணா PLC இன் செயற்றிறனை (Performance) உள்வாரியாக அளவிடும் நோக்கத்திற்காக நிறுவன முகாமையாளர்களால் முன்னைய காலப்பகுதியின் ஒப்பீட்டு இலக்கங்களுடன் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இலாப நட்டக் கூற்றும் நிதி நிலைமைக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளது.

31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று

| | **2019** (ரு.) | **2018** (ரு.) |
|---|---|---|
| விற்பனைகள் ........................................................ | 160 000 | 120 000 |
| விற்பனைக்கிரயம் ................................................ | (90 000) | (70 000) |
| மொத்த இலாபம் ................................................ | 70 000 | 50 000 |
| நிர்வாகச் செலவுகள் ............................................ | (12 000) | (11 000) |
| விற்பனை விநியோகச் செலவுகள் ........................ | (24 000) | (15 000) |
| வட்டிச் செலவுகள் ................................................ | (3 000) | (1 000) |
| வரிக்கு முந்திய இலாபம் .................................... | 31 000 | 23 000 |
| வரிச் செலவுகள் .................................................. | (8 000) | ( 6 000) |
| வரிக்கு பிந்திய இலாபம் .................................... | 23 000 | 17 000 |
| செலுத்திய இடைக்கால பங்கிலாபம் ...................... | (10 000) | (8 000) |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் ................................ | 13 000 | 9 000 |

**31 மார்ச் 2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள்**

| | **2019** (ரு.) | **2018** (ரு.) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | |
| ஆதனம் பொறி உபகரணங்கள் ................................ | 168 000 | 140 000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| சரக்கிருப்பு ........................................................ | 12 700 | 4 000 |
| வியாபார வருமதிகள் ............................................ | 6 200 | 8 000 |
| காசு .................................................................. | 3 100 | 3 000 |
| **மொத்த சொத்துக்கள்** | **190 000** | **155 000** |
| **உரிமையாண்மை** | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் ................ | 100 000 | 100 000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் ................................ | 51 800 | 38 800 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | |
| தொகுதிக் கடன்கள் .............................................. | 15 000 | 5 000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வட்டி சென்மதி .................................................. | 1 200 | 600 |
| வரி சென்மதி ...................................................... | 800 | 200 |
| வியாபார சென்மதிகள் .......................................... | 21 200 | 10 400 |
| **உரிமையாண்மையும் மொத்தப்பொறுப்புக்களும்** ......... | **190 000** | **155 000** |

**ஏனைய தகவல்கள் ;**

(1) கூறப்பட்ட மூலதனமானது 10 000 சாதாரண பங்குகளை பிரதிபலிக்கின்றது.

(2) 31 மார்ச் 2019 மற்றும் 31 மார்ச் 2018 இல் பங்கொன்றுக்கான இறுதிச் சந்தை விலை முறையே ரு. 24 மற்றும் ரு. 15 ஆகும்.

**வேண்டப்படுவது ;**

(i) நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வதற்கான கருவி ஒன்றாக கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வின் வரையறைகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

[பக். 4 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



(ii) 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான சுகுணா PLC கம்பனியின் பின்வரும் கணக்கீட்டு விகிதங்களைக் கணிப்பிடுக.

- மொத்த இலாப விகிதம்
- தேறிய செயற்பாட்டு இலாப விகிதம்
- உரிமை மீதான வருவாய்
- உரிமையாண்மைக்கு கடன் மூலதன விகிதம்
- நடைமுறை விகிதம்
- விரைவுச் சொத்து விகிதம்
- வட்டிக் காப்பு விகிதம்
- பங்கொன்றுக்கான உழைப்பு (EPS)
- பங்கொன்றுக்கான இலாபம் (DPS)
- விலை வருவாய் விகிதம்

*(10 புள்ளிகள்)*

(iii) மேலே கணிப்பிடப்பட்ட விகிதங்களுள் பொருத்தமான விகிதங்களின் அடிப்படையில், சுகுணா PLC இன் இலாபத்தன்மை மற்றும் குறுங்கால நிதி நிலைமை தொடர்பில் கருத்துரைக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) அனுபவம் வாய்ந்த கம்பனி ஒன்றாக குறுங்கால நிதிப் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கு அமுல்படுத்தக்கூடிய **இரண்டு** தந்திரோபாயங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) நிறுவனமொன்றின் இலாபத்தன்மைக்கும் திரவத்தன்மைக்கும் இடையே காணப்படும் தொடர்பை சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**3.** (i) LKAS - 7 காசுப் பாய்ச்சற் கூற்று என்பதற்கிணங்க பின்வரும் சொற்பதங்களை வரையறுக்குக.

(அ) செயற்பாட்டு நடவடிக்கைகள்

(ஆ) முதலீட்டு நடவடிக்கைகள்

(இ) நிதியியல் நடவடிக்கைகள்

(ii) 2019 ஆண்டுக்கான ஜலதீபன் PLC நிறுவனத்தின் இலாப நட்டக் கூற்றும் நிதி நிலைமைக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளது.

31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று

| | **(ரூ. 000)** |
|---|---:|
| விற்பனைகள் ………………………….. | 12 800 |
| விற்பனைக்கிரயம் ……………………... | (7 650) |
| மொத்த இலாபம் ……………………… | 5 150 |
| ஏனைய வருமானம் …………………… | 50 |
| விநியோகச் செலவுகள் ………………… | (1 245) |
| நிர்வாகச் செலவுகள் …………………… | (855) |
| நிதிக் கிரயம் ……………………………. | (400) |
| வரிக்கு முந்திய இலாபம் ……………….. | 2 700 |
| வரிச் செலவுகள் ……………………….. | (750) |
| வரிக்கு பிந்திய இலாபம் ……………….. | 1 950 |
| செலுத்திய பங்குலாபம் ………………… | (500) |
| ஆண்டுக்கான நிறுத்தி வைத்த இலாபம் … | 1 450 |

[பக். 5 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



31 மார்ச் இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| சொத்துக்கள் | 2019 (ரு' 000) | 2018 (ரு' 000) |
|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | |
| ஆதனம் பொறி உபகரணம் | 11 500 | 9 500 |
| முதலீடுகள் | | 800 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| சரக்கிருப்பு | 2 550 | 1 400 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 460 | 380 |
| காசு | 790 | 120 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **15 300** | **12 200** |
| **உரிமையாண்மை** | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 7 500 | 5 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 4 950 | 3 500 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | |
| தொகுதிக் கடன்கள் 12% | 1 000 | 2 500 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வட்டி சென்மதி | 80 | 40 |
| வரி சென்மதி | 470 | 310 |
| வியாபார சென்மதிகள் | 1 300 | 850 |
| **உரிமையாண்மையும் மொத்தப் பொறுப்புக்களும்** | **15 300** | **12 200** |

**மேலதிக தகவல் ;**

(1) கம்பனியானது நடைமுறைக் காலப்பகுதியில் தனது முதலீட்டை ரூ. 900 000 க்கு விற்றுள்ளது.

(2) நடைமுறையாண்டில் ரூ. 250 000 கிரயமுடையதும் ரூ. 200 000 கொண்டு செல் பெறுமதியுடையதுமான இயந்திரமொன்று ரூ. 150 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(3) பின்வரும் தகவல்கள் ஆதனம் பொறி உபகரணங்கள் தொடர்பானவை ஆகும்.

| | 2019 (ரு' 000) | 2018 (ரு' 000) |
|---|---|---|
| கிரயம் | 14 650 | 12 000 |
| திரண்ட பெறுமானத்தேய்வு | 3 150 | 2 500 |
| தேறிய புத்தகப் பெறுமதி | 11 500 | 9 500 |

(4) நடைமுறையாண்டின் போது கம்பனியானது ரூ. 2 500 000 க்கு சாதாரண பங்குகளுக்கான உரிமை வழங்கலொன்றை செய்திருந்தது.

**வேண்டப்படுவது :**

31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஜலதீபன் PLC இன் காசுப் பாய்ச்சற் கூற்று (நேரில் முறையின் பிரகாரம்)

*(20 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



**4.** கீழே தரப்படும் தகவல்கள் வரையறுத்த பொனிட்டா (தனியார்) நிறுவனத்தின் வங்கிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பானதாகும்.

31 டிசெம்பர் 2019 இலுள்ளவாறான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று

| | (ரூ.) | (ரூ.) |
|---|---|---|
| காசேட்டின்படி மீதி | | 50 000 |
| வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | | |
| காசோலை இல. 124567 | 30 000 | |
| காசோலை இல. 124572 | 50 000 | 80 000 |
| வசூலிக்கப்படாத காசோலைகள் | | |
| காசோலை இல. 45678 | 20 000 | |
| காசோலை இல. 56789 | 40 000 | (60 000) |
| வங்கிக்கூற்றின்படி மீதி | | 70 000 |

31 ஜனவரி 2020 இல் முடிவடைந்த மாதத்துக்கான காசுப்புத்தகம் (நடைமுறை கணக்கு)

| | (ரூ.) | | (ரூ.) |
|---|---|---|---|
| மீதி கீழ் கொண்டு வந்தது (2020.01.01) | 50 000 | கடன்கொடுத்தோர் - காசோலை இல. 124575 | 15 000 |
| கடன்பட்டோர் - காசோலை இல. 67890 | 40 000 | கடன்கொடுத்தோர் - காசோலை இல. 124576 | 20 000 |
| கடன்பட்டோர் - காசோலை இல. 78901 | 50 000 | சம்பளம் - காசோலை இல. 124577 | 80 000 |
| காசு வைப்பு | 100 000 | கடன்கொடுத்தோர் - காசோலை இல. 124578 | 30 000 |
| கடன்பட்டோர் - காசோலை இல. 89012 | 20 000 | கடன்கொடுத்தோர் - காசோலை இல. 124579 | 18 000 |
| கடன்பட்டோர் - காசோலை இல. 66001 | 35 000 | மீதி | **132 000** |
| | **295 000** | | **295 000** |

31 ஜனவரி 2020 இல் முடிவடைந்த மாதத்துக்கான சுருக்கமான வங்கிக் கூற்று

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|
| மீதி (2020.01.01) | – | – | 70 000 |
| காசோலை வைப்பு 45678 | – | 20 000 | 90 000 |
| காசோலை வைப்பு 56789 | | 40 000 | 130 000 |
| காசோலை 124575 | 15 000 | – | 115 000 |
| காசோலை வைப்பு 67890 | | 40 000 | 155 000 |
| காசோலை வைப்பு 78901 | | 50 000 | 205 000 |
| காசோலை 124576 | 20 000 | – | 185 000 |
| காசோலை 124567 | 30 000 | – | 155 000 |
| காசு வைப்பு | | 100 000 | 255 000 |
| காசோலை 124577 | 80 000 | | 175 000 |
| பங்குலாபக் கிடைப்பனவு | | 15 000 | 190 000 |
| காப்புறுதி கட்டுப்பணம் SLIC | 30 000 | | 160 000 |
| வங்கிக் கட்டணங்கள் | 5 000 | | **155 000** |

**வேண்டப்படுவது ;**

(i) சீராக்கப்பட்ட காசுப் புத்தகம்

(ii) 31 ஜனவரி 2020 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று

(iii) காசோலைகள் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் பயன்படுத்தக்கூடிய சிறந்த இரண்டு உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தருக.

*(10 புள்ளிகள்)*

/பக். 7 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE

5. (i) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றில் இயல்பாகவே அமைந்த இடர் காரணிகள் (inherent risk factors) **நான்கு** தருக.

(ii) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றில் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் **நான்கு** தருக.

(iii) வணிக நிறுவனமொன்றின் கணக்கீடு மற்றும் ஏனைய தகவல்கள் தொடர்பில் அரசாங்கம் ஏன் அக்கறை செலுத்த வேண்டுமென்பதற்கு **நான்கு** காரணங்கள் தருக.

(iv) "தடயவியல் கணக்கீடு (Forensic Accounting)" என்பதன் கருத்தை சுருக்கமாக விளக்குக.

*(10 புள்ளிகள்)*

* * *

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்பரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2017 / 2018 (2020)**
Limited / Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Accountants' Service - 2017 / 2018 (2020)

**(02) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் II**
Financial Accounting - Paper II

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.
- கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- நிரல்படுத்தப்படாத (Non - Programmable) கணிப்பான்களை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படும்.

**1.** கீதா, சீதா ஆகியோர் இலாப நட்டங்களை சமமாகப் பகிரும் பங்குடைமையில் ஈடுபட்டுள்ளனர். 01.04.2018 இல் நீதா என்பவர் புதிய ஒரு பங்காளராக வணிகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். பின்வருவன 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்காக பங்குடைமையின் நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்கள் ஆகும்.

- நீதா காசாக ரூ. 300 000 ஐயும் உடன்பட்டுக் கொண்ட விலையான ரூ. 200 000 இல் சில உபகரணங்களையும் தனது மூலதனமாக வணிகத்திற்கு கொண்டு வந்தார்.

- பங்குடைமை உடன்படிக்கையானது பின்வரும் சரத்துக்களை உள்ளடக்கியது.

  (i) கீதா, சீதா, நீதா ஆகியோரிடையே இலாப நட்டங்கள் முறையே 3 : 3 : 2 என்ற அடிப்படையில் பகிரப்படல் வேண்டும்.

  (ii) பங்காளர்களில் அல்லது இலாப நட்ட விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்படும் ஒவ்வொரு தடவையும் பங்குடைமையின் நன்மதிப்பு மதிப்பிடப்படல் வேண்டும்.

  (iii) கீதாவும் நீதாவும் மாதாந்த சம்பளமாக முறையே ரூ. 30 000, ரூ. 25 000 பெற உரித்துடையவர்கள்.

  (iv) சீதாவுக்கு மொத்த தொகையாக வருடாந்த சம்பளம் ரூ. 150 000 வழங்கப்படும்.

  (v) ஈடுபடுத்தப்பட்ட நிலையான மூலதனத்தின் மீது பங்காளர்கள் 10% வருடாந்த வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.

  (vi) வணிகம் தொடர்பாக பங்காளர் ஒருவரால் செய்யப்படும் எந்தவொரு செலவையும் பங்குடைமையானது திரும்பச் செலுத்தும்.

  (vii) பங்காளர்களால் வணிகத்துக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு வருடாந்தம் 15% வட்டி வழங்கப்படும்.

  (viii) பங்காளர்களால் வணிகத்தில் இருந்து எடுக்கப்படும் பொருட்களுக்கு பட்டியல் விலையில் இருந்து 10% ஐ கழித்த பின்னர் வணிகத்தின் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

- 01.04.2018 இல் வணிகத்தின் நன்மதிப்பானது ரூ. 800 000 ஆக மதிப்பிடப்பட்டதுடன் அதிலிருந்து எழும் அவசியமான சீராக்கங்களை மூலதனக் கணக்கினூடாகச் செய்வதற்கு பங்காளர்கள் இணங்கினர்.

- வணிகம் தொடர்பில் பங்காளர்களால் செய்யப்பட்ட செலவுகள் திரும்பச் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் கணக்கு வைக்க வேண்டியுள்ளவை.

  ➤ கீதாவினால் - காப்புறுதிக் கட்டுப்பணம் ரூ. 60 000

  ➤ சீதாவினால் - மின்கட்டணம் ரூ. 23 000

  ➤ நீதாவினால் - தொலைபேசி கட்டணம் ரூ. 48 000

- பெப்ரவரி 2019 வரை கீதா, நீதா ஆகியோருக்கு மாதாந்த சம்பளங்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன் சீதாவுக்கு வழங்கப்பட்ட சம்பளமான மொத்தத் தொகையானது வரைபு இலாபத்தை கணிப்பிட்ட போது ஆண்டுக்கான செலவுகளாக இனங்காணப்பட்டுள்ளது.

- கீதாவினால் எடுக்கப்பட்ட பொருட்கள் பட்டியல் விலையில் ரூ. 80 000 கணக்கு வைக்கப்படாதுள்ளது.

/பக். 2 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



- 31.03.2019 இலுள்ளவாறான வரைபு இலாபத்தை கணிப்பிட்ட பின்னர் வணிகத்தின் பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

| | ரூ. '000 | ரூ. '000 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 2 315 | |
| வாடகை முற்பணம் | 360 | |
| வாடகை முற்கொடுப்பனவு | 225 | |
| சரக்கிருப்புக்கள் | 265 | |
| வியாபார வருமதிகள் | 160 | |
| காசு | 375 | |
| மூலதனக் கணக்கு - கீதா | | 600 |
| மூலதனக் கணக்கு - சீதா | | 600 |
| மூலதனக் கணக்கு - நீதா | | 500 |
| நடைமுறை கணக்கு - கீதா | 100 | |
| நடைமுறை கணக்கு - சீதா | | 260 |
| நடைமுறை கணக்கு - நீதா | 200 | |
| கடன் - கீதா | | 500 |
| ஆண்டுக்கான இலாபம் | | 1 160 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 380 |
| | **4 000** | **4 000** |

- சீதாவுக்கு சொந்தமான கட்டடத்தில் வணிகமானது இயங்குவதுடன் 31.12.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மாதாந்த வாடகை ரூ. 30 000 செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுக்கான மாதாந்த வாடகை ரூ. 25 000 ஆகும். ஒவ்வொரு வருடத்தின் ஜனவரி முதலாம் திகதியில் ஒரு வருடத்துக்கான வாடகை முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளதுடன் கடைசியாக செலுத்திய கொடுப்பனவு, வாடகை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. 31.03.2018 இலுள்ளவாறான தோன்றும் மீதியை வாடகை முற்கொடுப்பனவு கணக்கு பிரதிபலிக்கின்றது.
- வடிவமைப்பதிலுள்ள நிபுணத்துவத்திற்காக நீதா வருடாந்தம் ரூ. 120 000 விசேட கொடுப்பனவுக்கு உரித்துடையவராவார். ஆனால் இது இன்னமும் செலுத்தப்படவில்லை.
- பங்காளர்களுக்கு வழங்கப்படும் பற்றுக்கள் உள்ளடங்கலாக காசுக் கொடுப்பனவுகள் அவர்களது நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.
- நீதாவினால் கொண்டு வரப்பட்ட இயந்திரத்துக்கான பெறுமானத்தேய்வு கிரயத்தின் மீது வருடாந்தம் 10% நீங்கலாக ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு சரியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :**

(i) ஆண்டுக்கான இலாபத்தை திருத்துவதற்கான கூற்று

(ii) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிர்வு கணக்குகள்

(iii) 31.03.2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(iv) பங்காளர் மூலதன கணக்குகள்

(v) பங்காளர் நடைமுறை கணக்குகள்

*(30 புள்ளிகள்)*

[பக். 3 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE

1506

**2.** தரிந்து என்பவர் $X$ மற்றும் $Y$ எனும் உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் "குளோப் உற்பத்தியாளர்" எனும் வணிகத்தை 01.04.2017 இல் ஆரம்பித்தார். இவர் 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டில் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து அதற்குத் தேவையான உபகரணங்களை வாங்கியதுடன் 01.04.2018 இல் வர்த்தக ரீதியாக உற்பத்தியையும் ஆரம்பித்தார். பின்வரும் தகவல்கள் "குளோப் உற்பத்தியாளர்கள்" தொடர்பாக கீழே தரப்படுகிறது.

- 01.04.2017 தொடக்கம் 31.03.2019 வரையான காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் (ரூ.'000) தொடர்பான சுருக்கம் வருமாறு

| கணக்குத் தலைப்பு | வரவு ரூ. ('000) | செலவு ரூ. ('000) | மீதி |
|---|---|---|---|
| தரிந்தவின் ஆரம்ப முதலீடு | | | 18 000 |
| மோட்டார் வாகனங்கள் | | 6 000 | 12 000 |
| வங்கிக் கடன் | 7 000 | | 19 000 |
| கட்டடங்கள் | | 8 000 | 11 000 |
| இயந்திரங்கள் | | 7 000 | 4 000 |
| விற்பனை மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரித்த காசு | 68 000 | | 72 000 |
| நேர் ஊழியம் | | 12 480 | 59 520 |
| சம்பளம் - தொழிற்சாலை | | 7 500 | 52 020 |
| சம்பளம் - காரியாலயம் | | 1 900 | 50 120 |
| தொழிற்சாலை பராமரிப்பு | | 1 710 | 48 410 |
| காப்புறுதி - கட்டடங்கள் | | 150 | 48 260 |
| இறை - கட்டடங்கள் | | 50 | 48 210 |
| மோட்டார் வாகன திருத்தமும் காப்புறுதியும் | | 300 | 47 910 |
| இயந்திர திருத்தங்கள் | | 1 680 | 46 230 |
| மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு - தொழிற்சாலை ஊழியர்கள் | | 5 620 | 40 610 |
| மூலப்பொருள் வழங்குனர்களுக்கான கொடுப்பனவு | | 11 750 | 28 860 |
| EPF கொடுப்பனவுகள் | | 3 960 | 24 900 |
| ETF கொடுப்பனவுகள் | | 660 | 24 240 |
| மோட்டார் வாகன எரிபொருள் | | 2 800 | 21 440 |
| தொழிற்சாலை எரிபொருளும் சக்தியும் | | 1 400 | 20 040 |
| செலுத்திய தனியுரிமைக் கட்டணங்கள் | | 1 400 | 18 640 |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | | 4 600 | 14 040 |
| பொதிசெய் பொருட்கள் | | 3 270 | 10 770 |
| உற்பத்திப்பொருள் $X$ இற்கான மறைமுக மூலப்பொருட்கள் | | 1 336 | 9 434 |
| உற்பத்திப்பொருள் $Y$ இற்கான மறைமுக மூலப்பொருட்கள் | | 4 | 9 430 |
| தரிந்தவினால் பற்றப்பட்ட தொகை | | 500 | 8 930 |
| 31.03.2019 இல் வாங்கிய புதிய இயந்திரம் | | 6 500 | 2430 |
| கடன் திரும்ப செலுத்தியது (ரூ. 500 000 வட்டியுடன்) | | 1 900 | 530 |

- தரிந்து தனது தாயாரினால் தனக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட காணியை ஈடாக வைத்து வணிகத்திற்காக வங்கியிலிருந்து கடனைப் பெற்றுக் கொண்டார். 01.04.2017 இல் இக் காணியின் சந்தைப் பெறுமதி ரூ. 10 மில்லியன் ஆகும். வங்கியானது முதலாவது வருடத்திற்கு வட்டியை அறவிடாதிருந்ததுடன் கடனைத் திருப்பிச் செலுத்தலானது 31.03.2019 இல் இருந்து ஆரம்பமாகும்.
- கட்டடங்களானது தொழிற்சாலை மற்றும் காரியாலய தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.
- $X$ மற்றும் $Y$ ஆகிய உற்பத்திப்பொருட்களின் ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கு ஒரே அளவு மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது.

/பக். 4 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



- *X* மற்றும் *Y* உற்பத்திப்பொருட்கள் தொடர்பான நேர் ஊழிய விகிதாசாரம் முறையே 2 : 1 ஆகும்.
- *X* மற்றும் *Y* சம்பந்தமாக விசேடமாகக் குறிப்பிடப்படுவது நீங்கலாக உற்பத்தி மேந்தலைகளானது உற்பத்தித் தொகைகளின் அடிப்படையில் *X* மற்றும் *Y* க்கிடையே பகிரப்படல் வேண்டும்.
- உற்பத்தி மற்றும் விற்பனைப் பதிவுகள் கீழே தரப்படுகிறது.

| | *X* (அலகுகள்) | *Y* (அலகுகள்) |
|---|---|---|
| மொத்த உற்பத்தி | 80 000 | 120 000 |
| மொத்த விற்பனைகள் | 69 000 | 115 000 |
| விற்கப்படாத உற்பத்தி | 10 000 | 5 000 |
| சாதாரண நட்டம் | 1 000 | 0 |

- 31.03.2019 இல் மூலப்பொருள் இருப்புக்களின் கிரயம் ரூ. 4 மில்லியன்கள் ஆகும்.
- கட்டடத்தின் 3/5 பகுதி தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படுகிறது.
- சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட 8% ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கொடுப்பனவு பங்களிப்புடன் நிறுவனத்தின் பங்களிப்பான 12%மும் ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கொடுப்பனவு பங்களிப்பான 3%மும் ஒவ்வொரு மாதத்தின் கடைசி நாளில் ஒழுங்காக செலுத்தப்பட்டது. ஆண்டுக்கான மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு நீங்கலாக சம்பளப் பட்டியலின் விபரங்களுடன் EPF மற்றும் ETF ஆகியவற்றின் கழிப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான சுருக்கம் கீழே உள்ள அட்டவணையில் தரப்படுகின்றது. (ரூ. 000).

| | தொழிற்சாலை நேர் | தொழிற்சாலை மறைமுகம் | காரியாலயம் |
|---|---|---|---|
| மொத்தச் சம்பளங்கள் | 12 000 | 8 000 | 2 000 |
| EPF கழிப்பனவு 8% | – 960 | – 640 | – 160 |
| EPF மற்றும் ETF சம்பந்தப்படாத கொடுப்பனவுகள் | 1 440 | 140 | 60 |
| தேறிய சம்பளம் | **12 480** | **7 500** | **1 900** |
| தொழில் வழங்குனர் பங்களிப்பு | | | |
| - EPF 12% | 1 440 | 960 | 240 |
| - ETF 3% | 360 | 240 | 60 |

- மோட்டார் வாகனங்கள் தொடர்பான 50% செலவுகள் உற்பத்தி சம்பந்தமான கிரயமாக இனங் காணப்படல் வேண்டும்.
- இயந்திரங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் முறையே 4 மற்றும் 5 வருடங்கள் பயன்படுத்தப்பட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.
- 40 வருடங்களுக்கு கட்டடங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.
- உற்பத்தி செய்யப்படும் *X* மற்றும் *Y* ஆகிய உற்பத்திப்பொருட்களின் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 10 வீதம் தனியுரிமைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- தரப்பட்ட தகவல்களில் காணப்படும் உருப்படிகள் நீங்கலாக 31.03.2019 இல் உள்ளவாறான ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கீழே தரப்படுகிறது.

| | ரூ. '000 |
|---|---|
| வாடிக்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட வேண்டிய தொகை | 2 400 |
| பயன்படுத்தப்படாத பொதிசெய் பொருட்கள் | 370 |
| மூலப்பொருள் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | 7 250 |

**வேண்டப்படுவது :**

(i) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கு

(ii) *X* மற்றும் *Y* உற்பத்திப்பொருட்களின் ஒரு அலகுக்கான உற்பத்திக் கிரயத்தை எடுதது்க் காட்டும் கூற்று

(iii) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி மற்றும் நிர்வாகம் சம்பந்தமான மொத்த ஊழியக் கிரயம்

(iv) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் (குறிப்பு : தேறிய சொத்துக்களின் மாற்றங்களை பயன்படுத்துக.)

*(20 புள்ளிகள்)*

[பக். 5 ஐப் பார்க்க

DOWNLOADED FROM
THE WEBSITE OF DOE



**3.** அரசாங்க கணக்காளர்களால் உருவாக்கப்பட்ட சங்கமொன்றில் 31.03.2019 இல் இருந்த அங்கத்தவர்கள் 1000 ஆக காணப்பட்டதுடன் இதில் 100 அங்கத்தவர்கள் 01.01.2019 இலேயே சங்கத்தில் இணைந்து கொண்டவர்கள் ஆவர். ஒரு அங்கத்தவருக்கான மாதாந்த சந்தா ரூ. 50 ஆகும். சங்கத்திற்கு வருமானம் ஈட்டுவதற்காக புத்தகசாலை ஒன்று நடாத்தப்படுகின்றது. 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்காக பின்வரும் தகவல்கள் தரப்படுகிறது.

- அங்கத்தவர்களுக்கான சந்தாப் பணம் அவர்களது சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுவதுடன் சங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்படுகிறது. எவ்வாறாயினும், சில பிரச்சினைகள் காரணமாக மார்ச் மாதத்துக்கான சந்தாப் பணம் 20.04.2019 இலேயே வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தது.
- நிலையான வைப்புக்கள் 10% வருடாந்த வட்டியை கொண்டுள்ளதுடன் 31.03.2018 இல் காணப்பட்ட வருமதி வட்டி வைப்புடன் சேர்க்கப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்கான வட்டியானது 10.04.2019 இல் சங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்.
- வங்கிக் கணக்கின் சுருக்கம் வருமாறு

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | | 526 500 |
| **பெறுவனவுகள்** | | |
| புத்தகசாலை மூலமான சேகரிப்பு | 1 845 000 | |
| சந்தா | 505 000 | |
| நன்கொடைகள் | 84 000 | |
| பழைய புதினப் பத்திரிகைகள் விற்பனை | 2 500 | 2 436 500 |
| | | 2 963 000 |
| **கொடுப்பனவுகள்** | | |
| புத்தக வெளியீட்டாளர்களுக்கான கொடுப்பனவு | 782 000 | |
| புத்தகசாலை ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 450 000 | |
| புத்தகசாலை வாடகை | 150 000 | |
| மின்சாரம் | 98 000 | |
| தண்ணீர் | 32 000 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 46 000 | |
| சில்லறைக் காசேட்டு செலவுகள் | 80 000 | |
| வருடாந்த பொதுக் கூட்டச் செலவுகள் | 424 100 | |
| பிரயாணச் செலவுகள் | 31 500 | |
| காகிதாதிகள் | 24 000 | |
| நலன்புரிச் செலவுகள் | 316 400 | |
| தொலைக்காட்சிப் பெட்டி | 62 000 | |
| கணக்காய்வு கட்டணங்கள் | 15 000 | 2 511 000 |
| 31.03.2019 இலுள்ளவாறான மீதி | | 452 000 |

- சில்லறைக் காசேட்டு செலவுகளின் சுருக்கம்

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| 01.04.2018 இல் மீதி | | 12 000 |
| பொருளாளரிடமிருந்து பெற்ற காசு | | 80 000 |
| | | 92 000 |
| **கொடுப்பனவுகள்** | | |
| உணவுப் பொருட்கள் | 64 000 | |
| போட்டோ பிரதி பண்ணல் | 1 900 | |
| தபால் | 4 800 | |
| பிரயாணங்கள் | 2 100 | |
| புதினப் பத்திரிகைகள் | 12 700 | 85 500 |
| 31.03.2019 இல் மீதி | | 6 500 |

/பக். 6 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



- ஆதனம் பொறி உபகரணங்களின் கிரயத்தின் மீது வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் இது புத்தகசாலை தொடர்பானதாகும்.
- சங்கத்திற்காக தொலைக்காட்சிப் பெட்டியானது 31.03.2019 இல் வாங்கப்பட்டது.
- தரப்பட்ட தகவல்களில் காணப்படும் உருப்படிகள் நீங்கலாக 31.03.2019 இலுள்ளவாறான சங்கத்தின் ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கீழே தரப்படுகின்றது.

| | 31.03.2019 | 31.03.2018 |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | ? | 120 000 |
| வங்கியிலுள்ள நிலையான வைப்பு | ? | 1 100 000 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் | 20 000 | 15 000 |
| புத்தகசாலைக் காசு மீதி | 25 000 | 0 |
| புத்தகக் கையிருப்புக்கள் | 450 000 | 370 000 |
| வெளியீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | 120 000 | 90 000 |

**வேண்டப்படுவது :**

(i) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான புத்தகசாலையின் இலாப நட்டக் கூற்று

(ii) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சங்கத்தின் வருமானச் செலவுக் கூற்று

(iii) 31.03.2019 இலுள்ளவாறான சங்கத்தின் நிதி நிலைமைக் கூற்று

*(20 புள்ளிகள்)*

**4.** (A) 10 மில்லியன் ரூபாவுக்கான பாடசாலைக் கட்டடமொன்றைக் கட்டுவதற்காக 30 ஜூன் 2018 இல் கல்வி அமைச்சினால் விலை கூறல் மூலம் "Pile" கட்டடக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் தகவல்கள் இக்கட்டுமானம் தொடர்பானவையாகும்.

- மேலதிக வேலைகள் காரணமாக 2018 டிசெம்பரில் ஒப்பந்த விலையானது ரூ. 12 மில்லியனாக மீள திருத்தியமைக்கப்பட்டது.
- மதிப்பிடப்பட்ட வேலையின் உண்மையான கிரயம் ரூ. 8 600 000
- செய்யப்பட வேண்டிய மேலதிக வேலைக் கிரயம் ரூ. 1 400 000
- 31.03.2019 வரை ஏற்பட்ட நேர் கிரயம் ரூ. 8 300 000
- 31.03.2019 இல் சான்றுப்படுத்தப்பட்ட வேலையின் பெறுமதி ரூ. 7 500 000
- 31.03.2019 இல் வேலையின் போது பெறப்பட்ட கொடுப்பனவு ரூ. 6 000 000
- வருமானத்தின் மீதான நிறுத்தி வைத்த தொகை 10%
  (இந்த நிறுத்திவைத்த தொகையானது கட்டடம் கையளிக்கப்படும் 03 மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட வேண்டும்.)
- கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 30 ஜூன் 2019 இல் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது. சகல வேலைகளும் பொறியியலாளர்களால் சான்றுப்படுத்தப்பட்டதுடன் மீதிக் கொடுப்பனவுகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் ஆகஸ்ட் மாத முடிவில் கட்டடத்தில் சில வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் இவ் ஒப்பந்தக்காரருக்கும் முறையாக அறிவிக்கப்பட்டது. திருத்தத்துக்கான கிரயம் ரூ. 500 000 ஆக மதிப்பிடப்பட்டது.

**வேண்டப்படுவது :**

(i) 31.03.2019 மற்றும் 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான "Pile" கட்டடக்காரர்களின் கட்டுமான ஒப்பந்தக் கணக்கு

(ii) 2019.03.31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் சுருக்கம்

*(10 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE



(B) அரச நிறுவனங்களானது கட்டட நிர்மாண காலத்தின் போது கட்டுமானம் நடைபெறும் இடங்களை பரிசோதனை செய்வதற்காக பொறியியலாளர்களுக்கு கொடுப்பனவு செய்கின்றது. இச்செலவுகளானது வழமையாக 'நிர்வாகச் செலவுகள்' என்ற தலைப்புகளின் கீழே 'மூலதனச் செலவுகளாக' பாதிடப்படுகின்றது. ஆகையால், இச்செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றது. எவ்வாறெனினும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 7 ஆதனம் பொறி உபகரணமானது நிர்வாகச் செலவுகள், ஆதனம் பொறி உபகரணத்தின் கிரயமாக இனங்காணப்படக்கூடாது எனக் கூறுகின்றது.

(i) நியமத்தில் காணப்படும் இந்த ஏற்பாட்டின் பின்னாலுள்ள நியாயத்தை விளக்குக. *(03 புள்ளிகள்)*

(ii) SLPSAS 7 இன் கீழ் இருந்தபோதும் இச்செலவை மூலதனமாக்குவதை நியாயப்படுத்துக. *(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 15 புள்ளிகள்)*

**5.** (i) "நிறுவனமொன்றின் நடவடிக்கைகள் கிளைகளினூடாக செயற்படுத்தப்படும் போது தலைமையகத்தின் முகாமையாளர்கள் அதன் காசு மற்றும் சரக்கிருப்புகளின் கட்டுப்பாடு தொடர்பில் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு அக்கறை செலுத்துவார்கள்."

கிளைகளுக்கு நேரடியாக விஜயம் செய்வது நீங்கலாக தலைமையகத்தினால் காசு மற்றும் சரக்கிருப்புக்களின் மீது எவ்வகையான கணக்கீட்டு கட்டுப்பாடுகள் அமுல்படுத்த முடியுமென்பதனையும் எவ்வாறு இக்கட்டுப்பாடுகளானது கிளைகளில் தவறான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதனை உறுதி செய்யுமென்பதனையும் விளக்குக. *(03 புள்ளிகள்)*

(ii) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்காக நிறுவனமொன்றின் தலைமையகம் மற்றும் கிளைகளுக்கிடையே நடைபெற்ற கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்படுகிறது.

| | கிரயம் (ரூ. '000) | விற்பனை விலை (ரூ. '000) |
|---|---|---|
| 2018.04.01 இல் கிளையில் இருந்த சரக்கு | 2 000 | 2 500 |
| தலைமையகத்தினால் கிளைக்கு அனுப்பிய சரக்கு | 16 000 | 20 000 |
| கிளையினால் திருப்பியனுப்பப்பட்ட சரக்கு | 1 000 | 1 250 |
| கிளையினால் செய்யப்பட்ட விற்பனை | | 17 500 |
| வாடிக்கையாளரால் கிளைக்கு திருப்பி அனுப்பப்பட்ட சரக்கு | 400 | 500 |
| வாடிக்கையாளரால் தலைமையகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட சரக்கு | 600 | 750 |
| 31.03.2019 இல் கிளையில் சரக்கிருப்பு | 3 000 | 3 750 |

| | (ரூ. '000) |
|---|---|
| கிளையினால் காசாகச் செய்யப்பட்ட நிர்வாகச் செலவுகள் | 30 |
| கிளைக்காக தலைமையகத்தினால் செய்யப்பட்ட நிர்வாகச் செலவுகள் | 10 |
| தலைமையகத்தினால் கிளை நடவடிக்கைகள் மீது விதிக்கப்பட வேண்டிய பெறுமானத்தேய்வு | 15 |
| கிளையின் மீது விதிக்கப்பட வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் | 25 |

குறிப்பு : மையப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை பயன்பாட்டில் உள்ளதென எடுகோள் கொள்க.

**வேண்டப்படுவது :**

(i) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கிளைச் சரக்கிருப்பு கணக்கு

(ii) தலைமையகத்தின் இலாப நட்டக் கூற்றில் காட்டப்பட வேண்டிய கிளைக்கு அனுப்பிய சரக்கிருப்பின் பெறுமதி

(iii) 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கிளையினால் உழைக்கப்பட்ட இலாபம்

*(12 புள்ளிகள்)*

*(மொத்தம் 15 புள்ளிகள்)*

***

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE 1566

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - **2017 / 2018 (2020)**
Limited / Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Accountants' Service - 2017 / 2018 (2020)

**(03)** செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்
Cost and Management Accounting

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.
- கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களை (Non - Programmable Calculators) பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படும்.

**1.** அனில் கம்பனியானது ஒரு தொகுதிப் படச் சட்டங்களை உற்பத்தி செய்கின்றது. கம்பனியானது நியம எல்லைக் கிரய முறைமையினை பயன்படுத்துவதுடன் இது கம்பனியானது கிரயத்தினை பயனுறுதிதன்மை வாய்ந்த முறையில் மேற்பார்வை செய்யவும், விலைக் கொள்கையினை இலகுபடுத்தவும் அனுமதியளிக்கிறது. கம்பனியினது மிகவும் பிரசித்தி பெற்ற படச் சட்டம் 'பொருள் *A*' ஆகும். பின்வருவன அடுத்த மார்ச் மாதத்திற்காக பாதிடப்பட்ட தொகைகளாகும்.

| | ஒரு அலகு (ருபா) | மொத்தக் கிரயம் (ருபா) |
|---|---|---|
| விற்பனைகள் | 1 450 | 7 250 000 |
| அடிப்படைச் சட்டத்தின் கிரயம் | 355 | (1 775 000) |
| கண்ணாடி (0.25 சதுர மீற்றர் / சட்டம், ருபா 340 ஒரு சதுர மீற்றர்) | 85 | (425 000) |
| கொக்கிகள் (2 கொக்கிகள் / சட்டம், ஒவ்வொன்றும் ருபா 65 ) | 130 | (650 000) |
| ஊழியம் (0.25 மணித்தியாலம் / சட்டம், ருபா 1100 ஊழிய மணித்தியாலம் ஒன்றிற்கு) | 275 | (1 375 000) |
| மாறும் மேந்தலை (0.25 மணித்தியாலங்கள் / சட்டம், ருபா 130 இணைக்கும் ஊழிய மணித்தியாலம் ஒன்றிற்கு) | 32.5 | (162 500) |
| நிலையான உற்பத்தி மேந்தலை | | (872 500) |
| இலாபம் | | 1 990 000 |

மார்ச் மாதத்தில் கம்பனியானது 4 960 அலகு பொருள் *A* யினை உற்பத்தி செய்து விற்பனை செய்ததுடன் பின்வரும் உண்மை பெறுபேறுகளை பதிவு செய்தது.

| | ருபா |
|---|---|
| விற்பனைகள் | 7 291 200 |
| அடிப்படைச் சட்டம் (ஒவ்வொன்றும் ருபா 350) | (1 736 000) |
| கண்ணாடி (மொத்தமாக 1 250 சதுரமீற்றர்கள்) | (427 500) |
| கொக்கிகள் (ஒவ்வொன்றும் ருபா 62.50) | (620 000) |
| ஊழியம் (1 220 மணித்தியாலங்கள்) | (1 348 100) |
| மாறும் மேந்தலை (ஊழிய மணித்தியாலங்கள்) | (164 700) |
| நிலையான உற்பத்தி மேந்தலை | (821 500) |
| இலாபம் | 2.173 400 |

**வேண்டப்படுபவை :**

(i) மூலப் பாதீடு, நெகிழ்வான பாதீடு, உண்மைப் பெறுபேறுகள் என்பனவற்றை எடுத்துக் காட்டத்தக்கதாக எல்லைக் கிரய முறையின் (Marginal Costing Method) அடிப்படையிலான இலாபக் கூற்றைத் தயாரிக்குக.

*(03 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



(ii) பின்வரும் முரண்களைக் கணிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

அடிப்படை சட்ட விலை முரணும் அடிப்படை சட்ட பாவனை முரணும்
கண்ணாடி விலை முரணும் கண்ணாடி பாவனை முரணும்
கொக்கிகளின் விலை முரணும் கொக்கிகளின் பாவனை முரணும்
ஊழிய வீத (rate) முரணும் ஊழிய வினைத்திறன் முரணும்
மாறும் உற்பத்தி மேந்தலை செலவு முரணும் வினைத்திறன் முரணும்
நிலையான உற்பத்தி மேந்தலை செலவு முரண்
விற்பனை விலை முரணும் விற்பனைத் தொகை முரணும்

(iii) மூலப் பாதீட்டு இலாபத்துடன் உண்மை இலாபத்தினை இணக்குகின்ற கூற்றினைத் தயாரிக்குக. *(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**2.** அனோமா கம்பனியானது 'வெட்டுதல் திணைக்களம்', 'முடிவுறுத்தல் திணைக்களம்' ஆகிய இரண்டு உற்பத்தி திணைக்களங்களை கொண்டுள்ளதுடன் 'களஞ்சிய சேவை', 'பராமரிப்பு சேவை' வசதிகள் என இரண்டு சேவைத் திணைக்களங்களையும் கொண்டுள்ளது. உற்பத்திப்பொருள் கிரயங்களின் கணிப்பீட்டில், பாரம்பரிய கிரய முறையினைப் பயன்படுத்தி கம்பனி சாட்டுதல் செய்கிறது. ஆகஸ்ட் மாதத்திற்கான பின்வரும் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

| | மொத்தம் (ரூபா) | வெட்டுதல் (ரூபா) | முடிவுறுத்தல் (ரூபா) | களஞ்சியம் (ரூபா) | வசதிகள் பராமரிப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| நேர் ஊழியம் | 408 990 | 111 510 | 297 480 | - | - |
| நேரில் மூலப்பொருட்கள் | 52 390 | 25 100 | 17 250 | 1 800 | 8 240 |
| மின்சாரம் | 280 300 | | | | |
| தொழிற்சாலை வாடகை | 164 500 | | | | |
| இயந்திர தேய்மானம் | 84 800 | | | | |
| தொழிற்சாலை காப்புறுதி | 26 200 | | | | |
| தொழிற்சாலை பாதுகாப்பு | 42 500 | | | | |
| நிர்வாகக் கிரயம் | 56 250 | | | | |

மேலும், ஆகஸ்ட் மாத்திற்கான கம்பனியினது பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்பான விபரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

| | மொத்தம் | வெட்டுதல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் | வசதிகள் பராமரிப்பு |
|---|---|---|---|---|---|
| இயந்திர மணித்தியாலங்கள் | 220 000 | 209 000 | 11 000 | – | – |
| நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 33 050 | 8 260 | 24 790 | – | – |
| தளப் பரப்பு (சதுர மீற்றர்களில்) | 1 000 | 500 | 200 | 200 | 100 |
| களஞ்சிய வழங்கல்களினது பெறுமதி (ரூபா) | 200 000 | 180 000 | 20 000 | – | – |
| கிலோவற் மணித்தியாலங்கள் | 10 | 6 | 2 | 1 | 1 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 90 | 20 | 60 | 4 | 6 |

**வேண்டப்படுபவை :**

(i) நான்கு திணைக்களங்களிற்கும் இடையிலான மேந்தலைச் செலவுகளின் பகிர்ந்தளிப்பினை காட்டுவதற்கான அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக. அத்துடன் பகிர்ந்தளித்தல் அடிப்படையினைத் தெளிவாகக் காட்டுக. *(06 புள்ளிகள்)*

(ii) சேவைத் திணைக்களங்களிற்கு மீள - பகிர்ந்தளித்த பின்பு உற்பத்தித் திணைக்களங்கள் இரண்டிற்குமான மொத்த பாதீடு செய்யப்பட்ட மேந்தலை செலவுகளைக் கணிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

[பக். 3 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

1506

(iii) ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்திற்குமான முற்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட மேந்தலை உறிஞ்சல் வீதங்களைக் கணிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iv) கம்பனியினது ஒரு உற்பத்திப்பொருள் தொடர்பில், ஓர் 'பெரிய தாங்கி' தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. இத்தகவல்களைப் பயன்படுத்தி, பெரிய தாங்கி ஒன்றினது கிரயத்தினைக் கணிப்பிடுக.

| | |
|---|---|
| நேர் மூலப்பொருட்கள் ரூபா 0.33 | |
| நேர் ஊழியம் | – வெட்டுதல் 0.5 நிமிடம் |
| | – முடிவுறுத்தல் 1 நிமிடம் |
| இயந்திர மணித்தியாலங்கள் | – வெட்டுதல் 2 நிமிடங்கள் |
| | – முடிவுறுத்தல் 0.25 நிமிடம் |

*(05 புள்ளிகள்)*

(v) கீழ் உறிஞ்சல் மேந்தலைக்கும் (under absorbtion overhead) மேல் உறிஞ்சல் மேந்தலைக்கும் (over absorbption overhead) இடையிலான வேறுபாட்டை விளக்குவதுடன் அவை ஒவ்வொன்றும் கிரய கணக்குகளில் எவ்வாறு கையாளப்பட வேண்டும் எனக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**3.** மக்கள் விளையாட்டுக் கழகம் இரண்டு மாதங்களிற்கு முன்னர் தனது செயற்பாட்டினை ஆரம்பித்ததுடன் அது தனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வகையான உடற் திடகாத்திரம் தொடர்பான வகுப்புக்களை வழங்குகிறது. பல்திறன் சுற்று வகுப்பு, நடன உடற் திடகாத்திர வகுப்பு என்ற இரண்டு பிரேரணைகள் முன்மொழியப்பட்டன. இவ் இரண்டு வகுப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

| | பல்திறன் சுற்று | நடன உடற் திடகாத்திரம் |
|---|---|---|
| வகுப்பு ஒன்றிற்காக ஒருவரிடம் அறவிடும் கட்டணம் | ரூபா 700 | ரூபா 800 |
| வருடாந்த காப்புறுதி | ரூபா 140 000 | ரூபா 120 000 |
| இசையும் இறைகள் அனுமதி தொடர்பான கட்டணம் | வகுப்பு ஒன்றிற்கு ரூபா 3 200 | வகுப்பு ஒன்றிற்கு ரூபா 3 400 |
| வருடாந்த ஏனைய வசதிகள் தொடர்பான செலவுகள் (மின்சாரம், நிர்வாகம் ஏனையவை) | ரூபா 25 360 | ரூபா 25 360 |
| போதானா ஆசிரியர் கிரயம் | வகுப்பு ஒன்றிற்கு ரூபா 5 000 | வருடம் ஒன்றிற்கு ரூபா 330 000 |
| வகுப்பு ஒன்றிற்கு எதிர்பார்க்கப்படும் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை | 50 | 40 |

**வேண்டப்படுபவை :**

(i) ஒவ்வொரு பிரேரணைக்குமான விற்பனை வருமானத்தின் சமப்பாட்டுப் புள்ளியினை (Break even point) ரூபாவில் கணிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

(ii) மக்கள் விளையாட்டு கழகமானது பல்திறன் சுற்று வகுப்புக்களிலிருந்து ரூபா 10 000 இலாபம் உழைக்க வேண்டுமெனின், எத்தனை வகுப்புக்கள் நடாத்தப்பட வேண்டும்? *(04 புள்ளிகள்)*

(iii) பல்திறன் சுற்று வகுப்பிற்கும் நடன உடற் திடகாத்திர வகுப்பிற்கும், வகுப்பு ஒன்றிற்கான கட்டணம் ரூபா 700 என கருதுக. நடன உடற் திடகாத்திர வகுப்பிலிருந்து பெறப்படும் இலாபமும் பல்திறன் சுற்று வகுப்பிலிருந்து பெறப்படும் இலாபமும் சமப்படுவதற்கு பல்திறன் சுற்று வகுப்புக்கள் எத்தனை நடாத்தப்பட வேண்டும்? *(05 புள்ளிகள்)*

(iv) விளையாட்டுக் கழகம் பல்திறன் சுற்று போதானாசிரியருக்கு, வகுப்பு ஒன்றிற்கான கட்டணத்துக்கு பதிலாக, நிலையான கட்டணமாக வருடம் ஒன்றிற்கு ரூபா 260 000 வழங்குவதனை கருத்தில் கொண்டுள்ளது எனின் புதிய சமப்பாட்டுப் புள்ளியினைக் கணிப்பிடுக. இம்மாற்றத்தினை விளையாட்டுக் கழகம் ஏற்படுத்த வேண்டுமா எனக் காரணங்களுடன் விளக்குக. *(03 புள்ளிகள்)*

(v) கிரயம் - தொகை - இலாபம் மாதிரி பகுப்பாய்வின் (cost - volume - profit model analysis) எடுகோள்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

[பக். 4 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



**4.** கமல் கம்பனி சிறிய புத்தக இறாக்கைகளை உற்பத்தி செய்கிறது. உற்பத்தியினையும் இருப்புக்களையும் மதிப்பிடுவதற்கு மாறும் கிரயவியலினைக் கம்பனியானது பயன்படுத்துகிறது. யூன், 2020 இல் முடிவுறும் அடுத்த காலாண்டுக்கான ஒரு தொகுதி கணிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

01 ஏப்பிரல் 2020 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட இருப்புக்கள்.

சிறிய புத்தக இறாக்கைகள் 1 500 அலகுகள்.

மரத்தாள்கள் (wood sheets) 2 000 அலகுகள்.

அடுத்த நான்கு மாதங்களிற்கான எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் (ரூபா)

| ஏப்பிரல் | மே | யூன் | யூலை |
|---|---|---|---|
| 4 950 000 | 3 690 000 | 5 400 000 | 4 320 000 |

சிறிய புத்தக இறாக்கை ஒன்றின் விற்பனை விலை ரூபா 900.

சிறிய புத்தக இறாக்கை ஒன்றின் நியம கிரய தாள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| மரத்தாள்கள் (தாள் ஒன்றிற்கு ரூபா 240) | 360 |
| நேர்க்கூலி (மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 164) | 205 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் (நேர்கூலி மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 60) | 75 |
| மொத்தம் | **640** |

போதுமான இருப்புக்கள் பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, கம்பனி கொள்கையானது அடுத்த மாதத்திற்காக 20% இறுதி இருப்பாக பேணுகிறது.

01 ஏப்பிரல் 2020 இல் மரத்தாள்களின் இருப்புக்களை இரண்டு மடங்காக பேணுவதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளதுடன் 31 டிசெம்பர் 2020 வரை, ஒவ்வொரு மாதமும் இந்த மட்டத்திலேயே இறுதி இருப்பினை பேணவுள்ளது. 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான நிலையான உற்பத்தி மேந்தலைகள் மற்றும் உற்பத்தியற்ற மேந்தலைகள் முறையே ரூபா 300 000 ஆகவும், ரூபா 400 000 ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேண்டப்படுபவை :**

(i) 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான உற்பத்திப் பாதீட்டினை அலகுகளில் தயாரிக்குக.
*(05 புள்ளிகள்)*

(ii) 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான மூலப்பொருள் கொள்வனவு பாதீட்டினை (அலகுகளிலும், ரூபாவிலும்) தயாரிக்குக.
*(06 புள்ளிகள்)*

(iii) 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான ஊழிய கிரய பாதீட்டினை (மணித்தியாலத்திலும் ரூபாவிலும்) தயாரிக்குக.
*(03 புள்ளிகள்)*

(iv) 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான மாறும் உற்பத்தி மேந்தலைக் கிரய பாதீட்டினைத் தயாரிக்குக.
*(02 புள்ளிகள்)*

(v) 30 யூன் 2020 இல் முடிவடையும் காலாண்டுக்கான பாதீடப்பட்ட வருமானக் கூற்றினைத் தயாரிக்குக.
*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**5.** (i) குமார் கம்பனியுடைய உற்பத்திச் செயன்முறை ஒன்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆரம்ப நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் | 6000 அலகுகள் (மாற்றற் கிரயம் தொடர்பாக 30% முடிக்கப்பட்டது) நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதி ரூபா 80 000 |
| இக்காலப்பகுதியில் ஏற்பட்ட கிரயங்கள் | நேர் மூலப்பொருட்கள் 40 000 அலகுகளின் கிரயம் ரூபா 324 000 |
| | நேர்கூலி ரூபா 100 200 |
| | உற்பத்தி மேந்தலை ரூபா 100 000 |
| உண்மையான வெளியீடு | முடிவுப் பொருட்கள் 32000 அலகுகளும் இறுதி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் 8 000 அலகுகள் மாற்றற் கிரயம் தொடர்பாக 40% முடிக்கப்பட்டுள்ளது. |

[பக். 5 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

அனைத்து மூலப்பொருட்களும் செயன்முறையின் ஆரம்பத்தில் எடுக்கப்பட்டதாக எடுகோள் கொள்வதுடன் இருப்புக்களை மதிப்பிடுவதற்கு முதல் வருகை - முதல் வெளியேறல் (FIFO) முறை பயன்படுத்தப்படுகிறது. மேலும், உள்ளீடுகளின் 10% சாதாரண நட்டம் ஆகும். நேர் மூலப்பொருட்கள் உள்ளீடு செய்ததன் பின்னர் ஆனால், வேறு எந்த கிரய கூறுகளும் உள்ளீடு செய்வதற்கு முன்னர், நட்டங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

**வேண்டப்படுபவை :**

(i) (அ) செயன்முறைக் (Process) கணக்கினைத் தயாரிக்குக. *(05 புள்ளிகள்)*

(ஆ) அலகு கிரயத்தினை எடுத்துக் காட்டத்தக்கதாக சமமான அலகு கூற்றினைத் (Equivalent Unit Statement) தயாரிக்குக. *(07 புள்ளிகள்)*

(ii) "பாதீடானது அரசாங்கத் தந்திரோபாயங்களையும் வளங்களின் ஒதுக்கீடுகளையும் அறிவிப்பதற்கான ஓர் கொள்கை ஆவணமாகும்."

(அ) அரசதுறை தொடர்பில் பாதீடுசார் ஆளுகை (Budgetary governance) மற்றும் பாதீடுசார் நிறுவகங்கள் (Budgetary Institutions) என்ற எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(ஆ) அரசதுறை பாதீடுசார் நிறுவகங்கள் எட்டினைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

❊ ❊ ❊

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE 1506

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2017 / 2018 (2020)
Limited / Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Accountants' Service - 2017 / 2018 (2020)

**(04)** கணக்காய்வு மற்றும் விசாரணைகள்
Auditing and Investigations

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.
- கறுப்பு அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

---

**1.** நீர் 31 மார்ச் 2019 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொறுப்பு வரையறுக்கப்பட்ட *ABC* பகிரங்க கம்பனியின் (PLC) கணக்காய்விற்கு பொறுப்பான சிரேஸ்ட உத்தியோகத்தராவீர் என கருத்தில் கொள்க.

(i) வருமதியாளர்களிடமிருந்து உறுதிப்படுத்தல் மேற்கொள்வதற்கு மாதிரிகளை (sample) தெரிவுசெய்யும் போது கருத்தில் கொள்ளப்படவேண்டிய விதிமுறைகள் அல்லது விடயங்கள் (criteria) **நான்கினை** நிரல்படுத்துக. *(04 புள்ளிகள்)*

(ii) "இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு ஏற்ப கணக்காய்வாளர்கள் கணக்காய்வினை மேற்கொள்ளல் வேண்டும்."
இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வின் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் **நான்கைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) கம்பனி ஒன்றிற்கு சொந்தமான காணி சம்பந்தமாக நிதிக்கூற்றின் தெரிவுப்புரைகள் (financial statement assertions) **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) வியாபார பெறுவனவுகள் (Trade receivables) சம்பந்தமாக உம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய **நான்கு** உறுதிப்படுத்தல் கணக்காய்வு சோதனைகளை (substantive audit procedures) சுருக்கமாக விவரிக்குக. *(06 புள்ளிகள்)*

**2.** (i) கம்பனியானது தொடர்ந்து இயங்குவதனை நிர்ணயிப்பதற்காக கணக்காய்வாளரால் நிறைவேற்றப்பட வேண்டிய **மூன்று** கணக்காய்வு நடைமுறைகளை தருக. *(04 புள்ளிகள்)*

(ii) தகவல் தொழில்நுட்பத்தினை (IT) பயன்படுத்தலானது நிறுவகத்தின் (entity) உள்ளக கட்டுப்பாட்டில் குறித்த ஆபத்தினை கொண்டிருக்கும்.
அவ்வாறான **மூன்று** ஆபத்துக்களை நிரல்படுத்துக. *(04 புள்ளிகள்)*

(iii) உள்ளக கட்டுப்பாடுகளின் இயற்கையான வரையறைகள் (inherent limitations) **நான்கினை** சுருக்கமாக விவரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) "உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் நோக்கமானது நிறுவனத்தின் அளவு, கட்டமைப்பு மற்றும் முகாமைத் தேவைப்பாடுகளைப் பொறுத்து பெருமளவிற்கு வேறுபடும்."
உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் **நான்கு** செயற்பாடுகளை சுருக்கமாக விவரிக்குக. *(06 புள்ளிகள்)*

**3.** (i) கணக்காளரின் ஒழுக்கவியல் நடத்தைக்கான அச்சுறுத்தல்கள் **நான்கினை** நிரல்படுத்துக. *(04 புள்ளிகள்)*

(ii) உயர் தொழில் கணக்காளர் எல்லா நேரத்திலும் இரகசியத்தினை பேணல் வேண்டும். உயர்தொழில் கணக்காளர்கள் இரகசிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய தேவைப்பாட்டின் **இரண்டு** சூழ்நிலைகளை அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வது எப்போது பொருத்தமானது என சுருக்கமாக விவரிக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) மோசடியான நிதி அறிக்கையிடலானது நிதிக்கூற்றுகளை வேணும் என்றே உள்நோக்குடன் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நிதிக்கூற்றுக்களின் தவறான கூற்றுகளாகும். மோசடியான நிதி அறிக்கையிடலை தயாரிப்பவர் நிறைவேற்றுவதற்கான **மூன்று** வழி முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



(iv) நிதிக்கூற்றுகள் முழுவதும் கணிசத்தன்மையான தவறான கூற்றுகளிலிருந்து (material misstatments) தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதற்கான முடிவிற்கு வருவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாத போது செயற்பரப்பின் வரையறை காரணமாக கணக்காய்வாளரின் அறிக்கையினை மாற்றியமைக்க (modify) வேண்டிய தேவை ஏற்படும்.
அத்தகைய கணக்காய்வு சான்றுகளை கணக்காய்வரால் பெற்றுக் கொள்ள **முடியாத** சூழ்நிலைகள் **மூன்றினை** விளக்குக.
*(06 புள்ளிகள்)*

**4.** (i) கம்பனி ஒன்றின் கணக்காய்வாளராக நியமிக்க **முடியாத** அல்லது பதவி வகிக்க **இயலாத** நபர்கள் **இருவரை** குறிப்பிடுக.
*(02 புள்ளிகள்)*

(ii) கணக்காய்வாளரால் வினாவப்பட்ட எழுத்து மூல பிரதிநிதித்துவத்தை அளிப்பதற்கு முகாமை மறுத்துள்ளது.
அவ்வாறான நிலைமையில் கணக்காய்வாளரால் எடுக்கப்பட வேண்டிய **மூன்று** நடவடிக்கைகள் எவை என விளக்குக.
*(06 புள்ளிகள்)*

(iii) கம்பனிக்குள் இடம்பெற்ற தொடர்புள்ள கட்சிகளை இனம் கண்டுகொள்வதற்கு கணக்காய்வாளரால் நிறைவேற்றப்படவேண்டிய கணக்காய்வு நடைமுறைகள் **மூன்றினை** தருக. *(06 புள்ளிகள்)*

(iv) கணக்காய்வு ஆவணப்படுத்தலின் (Audit documentation) வடிவம், உள்ளடக்கம் மற்றும் அளவு ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்கு கருத்தில் கொள்ளப்படும் **மூன்று** விடயங்களை நிரல்படுத்துக.
*(06 புள்ளிகள்)*

**5.** பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) நிபுணர் (expert)

(ii) ஏற்பாடுகளும் நிகழத்தக்கவைகளும் (provisions and contingencies)

(iii) அறிக்கையிடல் காலத்திற்கு பின்னைய நிகழ்வு (events after the reporting period)

(iv) கணக்கியல் கொள்கைகள் (Accounting policies)

*(05 × 4 = 20 புள்ளிகள்)*

***

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE 1506

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2017 / 2018 (2020)
Limited / Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Accountants' Service - 2017 / 2018 (2020)

**(06)** அரச நிதி முகாமைத்துவம்
Public Financial Management

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

---

**1.** (i) தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களத்தினால் முறைப்படி தயாரிக்கப்படும் ஆண்டு வரைவு வரவுசெலவு மதிப்பீடுகளை பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றும் வரையிலான படிமுறைகளைச் சுருக்கமாக குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) இலங்கை நிர்வாக சேவையின் விசேட வகுப்பிற்கு திரு.எஸ். சிறிமேவன் தரமுயர்த்தப்பட்டதுடன் 01 ஜனவரி 2020 இல் *XY* திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
ஓர் கணக்கீட்டு உத்தியோகத்தராக, தனது திணைக்களத்தின் நிதி நிர்வாகத்தினை நிதி ஒழுங்கு விதிகளுக்கேற்ப உறுதிப்படுத்துவதற்கு அதிகார கையளிப்பு தொடர்பாக அக்கறை கொண்டவராகவுள்ளார்.
நிதி ஒழுங்குவிதிகள் 135 இன்படி அதிகாரக் கையளிப்பினை மேற்கொள்ளும் போது கணக்கீட்டு உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகத்தினால் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? *(07 புள்ளிகள்)*

(iii) அத்தாட்சிப்படுத்தப்பட்ட அரச உறுதிச்சீட்டொன்று அதிகாரம் பெற்றுள்ள கொடுப்பனவு உத்தியோகத்தருக்கு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. இக் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரம் பெற்றுள்ள கொடுப்பனவு உத்தியோகத்தர் எவ்விடயங்களில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்புடையவராக காணப்படுவார்? *(08 புள்ளிகள்)*

**2.** (i) சகல அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

(அ) இவற்றுடன் சமர்ப்பிக்க வேண்டிய **மூன்று** பிரதான கூற்றுக்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(ஆ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆண்டு நிதிக்கூற்றுக்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் யாருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்? *(02 புள்ளிகள்)*

(ii) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு "அரசாங்க அலுவலகங்களில் முற்றிலும் உபயோகிக்கப்பட்ட அடியிதழ் சேர் புத்தகங்களை அழித்தல்" எனும் தலைப்பில் விரிவுரை ஒன்றினை மேற்கொள்வதற்காக இலங்கைக் கணக்காளர் சேவையில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவராக உள்ள நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்.
முற்றிலும் உபயோகிக்கப்பட்ட அடியிதழ் சேர் புத்தகங்களை அழிப்பதற்கு நிதி ஒழுங்குவிதிகளுக்கேற்ப எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை உங்களது விரிவுரையினூடாக எவ்வாறு விளக்குவீர் என்பதனை குறிப்பிடுக. *(07 புள்ளிகள்)*

(iii) *ABC* திணைக்களத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த சில கணினிகள் தொலைந்தது தொடர்பாக அதன் களஞ்சிய காப்பாளரினால் களஞ்சிய உத்தியோகத்தரினூடாக திணைக்களத் தலைவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டது. களஞ்சியத்தின் கதவினை திறந்து அங்குள்ள பொருட்களை யாரோ எடுத்துச் சென்றுள்ளதை தான் அவதானித்ததாகவும், பொலிஸில் அது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவ் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
இச்சம்பவம் தொடர்பான அறிக்கையினைப் பெறுவதற்கான விசாரணைக் குழுவின் தலைவராக திணைக்களத் தலைவர் உங்களை நியமித்திருப்பின் நிதி ஒழுங்குவிதிகள் 104 (4) இன்படி, விசாரணையின் முடிவில் 'முழுமையான அறிக்கையில்' (full report) உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



**3.** (i) திணைக்களமொன்றின் ஆண்டு வரைவு மதிப்பீடுகளில் புதிய முற்பணக் கணக்கொன்றினை உருவாக்குவதற்கான முன் அனுமதியினை யாரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்? *(02 புள்ளிகள்)*

(ii) அவ்வாறான அனுமதியை பெறுவதற்கான விண்ணப்பத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விபரங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(iii) "திணைக்களங்கள் தொடர்பான ஆண்டு வரைவு மதிப்பீடுகள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றதென்பதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தரை சார்ந்ததாகும்."
இச்சந்தர்ப்பத்தில் நிதி ஒழுங்குவிதிகளின்படி கணக்கீட்டு உத்தியோகத்தரால் விஷேடமாக கருத்திற் கொள்ளப்படும் விடயங்களைக் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

**4.** (i) அரசாங்க பெறுகை வழிகாட்டியினையும் கையேட்டினையும் பின்பற்றுவதால் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) பெறுகை வழிகாட்டியின்படி நியமிக்கப்படும் பெறுகைக் குழுவினால் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புக்களைக் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

(iii) பெறுகை முறையில் உள்ள ஆபத்தினை குறைந்தளவில் வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படும் **இரு** வகையான பாதுகாப்புப் பிணைகளைக் (security) குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

**5.** (i) சடுதியான காலநிலை மாற்றத்தினால் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களின் மேற்கு சாய்வு பகுதியில் ஏற்பட்ட மிகையான மழைவீழ்ச்சியினால் களனி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆற்றின் இரு கரையிலும் இருந்த மக்களினது அனர்த்த நிலைமைக்கு இது காரணமாக அமைந்தது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேண்டிய நிவாரண சேவைகளை உடனடியாக வழங்குவதற்கான அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆயினும், நிவாரணம் வழங்குவதற்கான முறைப்படியான நிதி ஏற்பாடுகள் வரவுசெலவு திட்டத்தினூடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என அறியக் கிடைத்தது.

(அ) இவ்வாறான நிலமைகளின் போது பணத்தினை பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நியதிச் சட்ட நிதியம் எது? *(02 புள்ளிகள்)*

(ஆ) இந்நிதியத்திலிருந்து பணத்தினை விடுவிப்பதற்குரிய பொருத்தமான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

(இ) இந்நிதியத்திலிருந்து பணத்தினை விடுவிப்பதற்கு வேண்டிய அனுமதி யாரினால் வழங்கப்படுகின்றது? *(02 புள்ளிகள்)*

(ii) அரசாங்க திணைக்களமொன்று குறிப்பிட்ட நோக்கத்திற்கென பயன்படுத்துவதற்காக பொதுமக்களிடமிருந்து பண நன்கொடையினை பெறும் போது அதனை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கும் வரையிலான நடைமுறையினை சுருக்கமாக குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

***